   

# மேற்கு வங்காளத்தில் கார்த்திகேய வழிபாடு

## ( KARTIKEYA WORSHIP IN WEST BENGAL )

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : டாக்டர் சீதாலட்மி விஸ்வநாத்
தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா

அறுவடைக் காலங்களில் கொண்டாடப் படும் விழாக்களில் செழிமையான அறுவடை நடக்க அருள் புரியும் கடவுளாக பார்க்கப்பட்டு கார்த்திகேயப் பெருமான் வணங்கப் படுகின்றார். தேவர்களின் படைத் தலைவனாக இருந்து கொண்டு தாரகாசுரனை அழித்ததாக கூறப்படும் புராணக் கடவுளைப் போன்றவரே அவர். இருவருக்கும் ஒரே பெயர் அமைந்து உள்ளன என்றாலும் அவர்களின் புராணங்களும் வரலாறும் வேறானவை. கார்த்திகை மாதக் கடைசியில் அறுவடைத் துவங்கும் முன்பு கார்த்திகேயப் பெருமான் வணங்கப் படுகின்றார்.

விவசாயத்தில் மேன்னைப் பெற்ற பல மாநிலங்களில் கொண்டாடப் படுவது போலவேதான் மற்ற அறுவடை முடிந்த உடன் பவுஷ் எனப்படும் டிஸம்பர்-ஜனவரி மாதங்களில் வங்காளத்தில் காலங்களில் அறுவடைத் திருவிழா நடைபெறுகின்றது. அந்த நேரங்களில் பெரிய விழா மற்றும் கணகாட்சிகள் நடைபெறுகின்றன. புதியதாக அறுவடை செய்த அரிசியை மட்டும் ஒரு அறையின் மூலையில் கொட்டி வைத்து , புஷ்ப சங்கராந்தி என, ஜனவரி மாதத்தில், 15 -16 தேதிகளில் வீட்டில் உள்ள பெண்கள் அறுவடைத் திருவிழாவில் கொண்டாடப்படும் தெய்வங்களுக்கு பூஜை செய்கின்றனர். மற்ற இடங்களைப் போலவே முதல் அறுவடையும் வங்காளத்தில் பெரும் புனிதமாகவும் மங்களகரமானதாகவும் கருதப் படுகின்றது. இப்படிப்பட்ட சடங்குகளைத் தவிற இனிப்புப் பண்டங்கள், கார வகைகள் செய்து குழந்தைகளுக்குத் தருவது வழக்கமானது.

   

கார்த்திகேயப் பெருமான் வழிபாட்டில் செய்யப்படும் சடங்குகளில் வயதான மற்றும் இளம் பெண்களும் பங்கேற்கின்றனர். வழிபாட்டுச் சடங்குகளில நன்கு தேர்ச்சி பெற்ற பெண்கள் மட்டுமே வயதான பெண்கள் தலைமையில் சடங்குகளைச் செய்கின்றனர். அந்த சடங்குகளைச் செய்யும் பெண்களின் இறுதி காலம் வரை அதைத் தொடர்ந்து செய்ய வேண்டிய அளவிற்கு அந்த சடங்குகள் மிகவும் எளிமையாக அமைக்கப்பட்டு உள்ளன.

அந்த சடங்குகள் உள் மனதில் ஒரு கலக்கத்துடன கலந்த எதிர் பார்ப்புடன் , அறுவடை நன்கு , தடங்கல் இன்றி , செழுமையாக நடக்க வேண்டும் என பிரார்தனை செய்து கொண்டு , நடத்தப்படும் எளிமையான வழிபாடு ஆகும். வழிபாடு தினத்தில் சடங்கு துவங்கும் முன் ஒரு அறுவடை செய்த நெல்லை ஒரு மண் பாண்டத்தில் நிறப்பி அந்த மண் பாண்டத்தை ஈரமான அரிசி மாவினால் கோலமிட்டு, சோழிகள், முளைவிட்ட தானியங்கள், நுனிக் கரும்பு, அந்த நேரங்களில் கிடைக்கும் கறிகாய்கள், பழ வகைகள் மற்றும் காய்ந்த பாக்குகள் போன்றவற்றை அதன் மீது கட்டி அலங்கரித்த பின் பின் பூஜைகளைத் துவக்குகின்றனர்.

அலங்கரித்த அந்த மண் பாண்டத்தை களி மண்ணால் செய்த புராணங்களில் கூறப்பட்டுள்ள கார்த்திகேயப் பெருமான் போன்ற கார்த்திகேயப் பெருமான் முன் வைத்து, இரவு முழுவதும் அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் வகையில் ஒரு நெய் விளக்கு ஏற்றி வைக்கப் படுகின்றது. அந்த பொம்மைக்குப் பின்புறம் ஒரு மரத் தடி நடப் பட்டு அதில் பழங்கள், பாக்குகள், வாழை , எலுமிட்சம் பழங்கள் முதலியன கட்டப்பட்டு இருக்கும். பண்டிதர் வந்து முக்கிய பூஜைகளை ஆரம்பித்து மாலைக்கு முன் முடித்து வைக்க விரதம் இருக்கும் பெண்கள். அந்த வழிபாட்டில் கலந்து கொள்ளும் பெரும்பான்மையோர் விவசாயிகளே. விரதம் இருக்கும் பெண்கள் அனைவரும் இரவு முழுவதும் அந்த பொம்மைக்கு முன் கண் விழித்தபடி அமர்ந்து நாட்டுப் பாடல்களைப் பாடியபடி இருப்பார்கள். அந்த நாட்டுப் பாடல்களில் ஒன்று இது.






பகீரே அரே ரீ பாபு ரீ
கெட்டர் பகீ னா தான் கயிலீ
உய்தா உய்தா தான் கே பொயதா பொய்தா ரங் சே
ஷோரய் நோலர் ஷக் பாஷாபி
இக் பபுபை தலியா அர் இக் பபுயில் கலியா
ஆர் இக் புபிர் கோபலி திலக்
குல் நா சிலிடே தக் தியா கோய ஜாய்
படுட் போடிசி ரத்தார் கேடீ
அரே ரே கேடார் பாகி நஹார் கேயிலி.

இந்தப் பாடல் நிலங்களில் வந்து பயிர்களை சாப்பிடும் பறவைகள், மற்றும் விலங்குகளை விரட்டுமாம் . சில சமயங்களில் விரதம் இருக்கும் பெண்கள் தங்கள் கைகளில் வில் அம்புகளை ஏந்தியபடி அங்கு வந்து மரத் தடியில் கட்டப்பட்டு உள்ள பழங்கள், பாக்குகள், வாழை , எலுமிட்சம் பழங்கள் முதலியவற்றை திருட வரும் பொழுது அவர்களை பயமுறுத்தித் துரத்துவர். விடியற் காலை அந்தப் பெண்கள் பாடல்கள் பாடியபடியே விதைகள் விதைப்பது, அறுவடை செய்வது போன்றவற்றை செய்து கொண்டு இருப்பார்கள். காலை விடிந்ததும் அந்த மண் பாண்டங்களை எடுத்துக் கொண்டு போய் அதில் உள்ள பண்டங்களில் சமையல் செய்து குடும்பத்தினருக்குக் கொடுப்பார்கள். பண்டிகையை குறிக்கும் வகையில் அரிசி மாவுக் கோலங்களும் போடுவார்கள்.

கார்த்திகேயப் பெருமானின் பொம்மையை கொண்டு சென்று நதியில் கரைப்பது இல்லை. அதை வீட்டுத் தோட்டத்திலேயோ அல்லது வயல்களிலோ சென்று வைத்து விடுவார்கள். அது பயிர்களைக் காப்பாற்றும் என நம்புகின்றனர்.

இயற்கையை மாசு படுத்தாமலேயே விவசாயிகள் தங்கள் விவசாயத் தொழிலை செய்தபடி வாழ்கின்றனர். அறுவடைக் காலங்களில் விளைந்துள்ள பயிர்களை பாம்புகள், பெருச்சாளிகள் போன்றவை சாப்பிட்டுவிட்டு நாசம் செய்யாமல் இருக்கவும், செழிப்பான அறுவடை நடக்கவும்

   

அருள் புரியுமாறு வேண்டிக் கொண்டு வணங்கப்படுகின்றார் கார்த்திகேயர். அறுவடை நடக்க அருள் புரியும் கடவுளான கார்த்திகேயருடன் உள்ள சேவலும், மயிலும் சேர்ந்தவாறு இருந்த வண்ணம் வளத்தையும் எல்லாம் நல்லபடி நடக்கவும் கொடுக்கின்றன என நம்புகின்றனர். சேவலும், மயிலும் ஒரே இனத்தைச் சார்ந்தவைகளே எனவும் அவைகள் கீழ் கண்ட குணங்களைப் பெற்று உள்ளன எனவும் நம்புகின்றனர்.

- எதிரிகளுடன் வீராவேசமாக சண்டைப் போடுவது
- விழிப்புடனும் , சுறுசுறுப்புடனும் இருப்பது
- அனைவருக்கும் கொடுத்தபடி உண்பது
- துன்பமுற்ற பெண்களிடம் சென்று உதவுவது

கார்த்திகேயரும் கொண்டிருந்த குணங்கள்

- தாரகாசுரனுடன் யுத்தம் முடியும்வரை உறக்கத்தையே வென்றவர்
- தேவர்களின் படைத் தலைவனாக இருந்தவர்
- தாரகாசுரனிடம் இருந்து கொடுமைகளை அனுபவித்தபடி இருந்த சுரபாலகனை பராக்கிரமாக விடுவித்து வந்தார்.

அழகின் உருவமான மயிலை வைத்திருந்த கார்த்திகேயரும் இளமையும், அழகையும் கொண்டவர் எனறு எண்ணிய மணமாகாத பெண்கள் தனக்கு கிடைக்கும் கணவனும் இளமையும், அழகையும் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதற்காக அவரை வழி படுகின்றனர். மணமான, மழலைச் செல்வம் அற்ற பெண்கள் தங்களுக்கு மழலைச் செல்வம் பெறும் வளம் இருக்க வேண்டும் என்பதற்காக அவரை வழி படுகின்றனர். அதனால்தானோ என்னவோ அங்கு உள்ள விலை மாதர்களும், திருடர்களும் தங்களுக்கு அழகு வேண்டும், வாழ்க்கையில் வளம் வேண்டும் என்பதற்காக அவரை வழிபடுகின்றனர்.






புராணங்களில கூறப்பட்ட கார்த்திகேய கடவுளின் குணங்களைப் போன்றே அறுவடை நடக்க அருள் புரியும் கடவுளான கார்த்திகேயரும் உள்ளதாக கருதப்பட்டதினால் , 18 -19 ஆம் நூற்றாண்டுகளில் கூட்டு வழிபாடு இருந்தது. அவரை லஷ்மி, ஸரஸ்வதி, மற்றும் வினாயகருடன் சேர்த்து வழி பட்டனர். வங்காளிகள் கார்த்திகேயர் ஒரு பிரும்மச்சாரி என்றே நினைக்கின்றனர். ஆனால் புராணங்களில கூறப்பட்ட கார்த்திகேய கடவுளிற்கு தேவசேனா என்ற மனைவி உண்டு. தாரகாசுரனைக் கொன்ற பின் அவளை மணந்து கொண்டு விசாகா என்ற பிள்ளையையும் பெற்றுக் கொண்டார். தேவி புராணத்தில் இது பற்றிக் கூறப்பட்டு உள்ளது. தேவி புராணத்தின்படி தேவசேனா சஷ்டி தேவி என்ற பெயரில் பக்தர்களுக்கு அருள் புரிந்தார். பிரும்ம பைபர்த்த புராணமும் கார்த்திகேயரின் மகனான விசாகா பற்றிக் கூறி உள்ளது.

புராணங்களில கூறப்பட்ட கார்த்திகேய கடவுளின் புனிதத் தன்மைக்கு களங்கம் ஏற்படும் வகையில் இன்றைக்கு வழிபாட்டு முறை மாறி உள்ளது. அங்கு அவரை விலை மாதர்களின் வழிபாட்டுக் கடவுளாகவே காண்கின்றனர். புராணங்களில கூறப்பட்ட கார்த்திகேய கடவுளை தைரியசாலி, வெற்றி வீரர், பராக்கிரமசாலி என்று புகழ் பாடியவர்கள், இன்றோ அவரை அழகானவர், இளமையானவர், வீரியம் தருபவர் என்ற எண்ணங்களில் பார்க்கப்படத் துவங்கியதால் ஏற்பட்ட விளைவே அது. இப்படியாக மக்கள் மற்ற கடவுட்களை அமர்த்தி உள்ள பீடத்தில் இருந்து அவரை இறக்கி விட்டதால் வங்காளிகள் அவரை பாபு கார்த்திகேயா என்றே அழைக்கின்றனர்.

கூட்டு வழிபாடுகளில் புராணங்களில கூறப்பட்ட கார்த்திகேய கடவுள் துர்கையுடன் சேர்த்து வணங்கப்படும் பொழுது அவருடைய சிலைகளையும் நதிகளில் கரைத்து விடுவார்கள். நல்ல அறுவடைக்கு அருள் புரியும் கடவுளான கார்த்திகேயர் செழிப்பிற்கும், வளத்துக்கும் , முக்கியமாக பெண்களால் மழலைச் செல்வம் பெறவும் பூஜிக்கப்படும் தனி நபர் வழிபடும் கடவுளாகவே உள்ளார்.

   

அவரை முறையாக செய்யப்படும் வழிபாடுகளில் பூஜிப்பது இல்லை. கார்த்திகேய கடவுளை குறித்து இதைக் கூறலாம்.

- கார்த்திகேயன் மஹாபாகன் மயூரோபரி சன்ஸ்திதம்
  தப்லா கங்கனா வர்ணபாங் ஸக்த்திஹஸ்தான் பரப்பிராதம்
  திவிஷுஜங் ஷத்ரு ஹன்தரான் நாநானன்கரபூஷிதம்
  பிரசன்னவதானன் தேவன்ஷாதனா ஸ்த்துப்பிரதம்
  ஓம் கண் கார்த்திகேயாய நமஹா.